Paper ID: ***RSHA08***

# கல்முனை முஸ்லிம்களது திருமண சம்பிரதாயத்தில் நிகாஹ் நடைமுறை: ஓர் இஸ்லாமியப் பார்வை


**M.I.M. Jazeel[1] & M.I. Rinosa[2]**

*[1]Department of Islamic Studies, South Eastern university of Sri Lanka, oluvil.*
*[2]Postgratuate Canditate, Department of Arabic and Islamic Civilization, University of Peradeniya*
*jazeelmi@seu,ac,lk   rinosaismail@gmail.com*



***ஆய்வுச்சுருக்கம்***

*முஸ்லிம்களது திருமணச் சம்பிரதாய நடைமுறையில் பிரதான ஒன்றாகவும் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடுகளைக் கொண்டமைந்த நிகழ்வாகவும் அமைகிறது. இந்தவகையில் முக்கிய பிரதேசங்களில் ஒன்றான கல்முனை பகுதி முஸ்லிம்களின் திருமணத்தில் நிகாஹ் ஒரு வைபவ நிகழ்வாக இடம் பெறுகிறது. இவ்வாய்வின் பிரதான குறிக்கோள் கல்முனை முஸ்லிம்களது திருமணம் இஸ்லாமிய அடிப்படைப் போதனைகளுடன் இயைந்து செல்கின்றதா என்பதை பரிசீலிப்பதாகும். அளவுசார், பண்புசார் ஆய்வு முறையில் அமைந்த இவ்வாய்வுக்காக கல்முனை முஸ்லிம்களது நிகாஹ் செயற்பாட்டை விளக்க முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பவை மூலம் பெறப்பட்டன. வினாக்கொத்து மூலமான தொகை ரீதியான தரவுகள் கணனி மென்பொருள் SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள் இணையத்தள ஆக்கங்கள் என்பன மீளாய்வுக்குட்படுத்தி இவ்வாய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத்திட்டம் நிறுவப்பட்டது. கல்முனை முஸ்லிம்களது திருமணத்தில் நிகாஹ் ஒரு வைபவமாகவே இடம்பெற்று வருகிறது. இந்நிகழ்வில் மணமகன், மணமகள், ஈஜாப் - கபூல், சாட்சி, வலி, திருமண குத்பா போன்ற விடயங்களில் இஸ்லாமிய நிகாஹ் வழிமுறைகள் சிரத்தையாக பேணப்படுகின்றது. காவின் பதிவு, குடி மரைக்காரை சாட்சியாக நியமித்தல், வட்டாகட்டுதல் போன்ற செயற்பாடுகள் இஸ்லாமன்றி பாரம்பரிய வழக்கத்தைகைக் கொள்வதாகவே உள்ளது. மேலும் மணமகனுக்கு தங்கமோதிரம் அணிவித்தல், பெண்ணின் முதலுரிமை வலி இருக்க அடுத்தவரை நியமித்தல், சுபநேரம் குறித்தல் என்பன இஸ்லாமிய விதிமுறைகளுக்கு உடன்படாதவையாக அமைகிறது. பொதுவாக நிகாஹ் நிகழ்வு, திருமண வைபவத்தின் ஒரு பகுதியாகவே இடம்பெறுகின்றது. இவ்வாய்வு திருமண சம்பிரதாயம் பற்றிய ஒரு ஆவணமாகவும் மாற்றத்தை வேண்டிநிற்கும் அறிவுறுத்தல்களைக் கொண்ட விழிப்புணர்வை ஏற்படுத்தவல்லதாகவும் அமைந்திடவல்லது.*



***கலைச்சொற்கள்***: *கல்முனை முஸ்லிம், முஸ்லிம் திருமணம், நிகாஹ், இஸ்லாமியத் திருமணம்*


## அறிமுகம்:

இலங்கையில் நன்கு அடையாளப்படுத்தப்பட வேண்டிய நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தை உடைய பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசமே கல்முனைக்குடி ஆகும். இலங்கை முஸ்லிம்களிடையே திருமணம் பிரதானமான ஒன்றாக இடம் பெறுகின்றது. இஸ்லாத்தில் திருமணம் ஒரு ஒப்பந்தமாகவே கொள்ளப்படுகின்றது.

அல்லாஹ் மனிதனை தன்னுடைய பிரதிநிதியாகப் படைத்து மனித இயல்புக்குப் பொருத்தமான வழிகாட்டலை வழங்கியுள்ளான். அந்த வழிகாட்டலில் ஒன்றே திருமணமாகும். இஸ்லாத்தில் திருமணம் நிகாஹ் எனப்படுகிறது. "'*நிகாஹ்'* என்பது விரிந்த பொருளைக் கொண்ட பதமாகும். "இது நிறுவப்பட்ட ஒரு சமயக் கட்டளை எனவும் மனைவியுடன் தாம்பத்ய உறவு கொள்ளுவதற்கான ஒப்பந்தம் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது." (Mohamed Shakir Ali. 2010. p:12)

இஸ்லாமியத் திருமண ஒப்பந்தம் *'அக்துன் நிகாஹ்'* எனப்படுகின்றது. '*நிகாஹ்*' வினுடைய பர்ளு ஐந்து ஆகும். இவை விவாகத்தின் போது முழுமையாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டும். இவற்றை '*ருக்ன்*' என்றும் குறிடுப்பிடுவதுண்டு. இதன் சிறப்பான கருத்து 'தூண்' என்பதாகும். இவற்றுள் ஒன்று சிதறினாலும் '*நிகாஹ்'* ஒப்பந்தம் நிறைவேறாது. இப்படித் தவற விடுவது தம்பதியரை விபசாரத்திலும் சேர்த்து விடும். அவையாவன, மணமகன், மணமகள், பெண்ணின் பொறுப்பாளர் (*வலி*), சாட்சிகள் (*ஷாஹித்*), ஒப்புவித்தலும், ஏற்றுக்கொள்ளலும் (*ஈஜாப் - கபூல்*) இவற்றுடன் இஸ்லாமிய நிகாஹில் *'குத்பா'* எனும் பிரசங்கமும் இடம் பெறுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தைப் பொருத்தவரை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சிகளின் தாக்கம் காரணமாக தற்கால முஸ்லிம்களது திருமணத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அந்நிய கலாச்சார தாக்கங்கள், பழமை போற்றும் சிந்தனை, பிறருக்கு காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம், இஸ்லாம் பற்றிய தெளிவின்மை என்பவற்றால் இஸ்லாத்தில் அனுமதிக்காத பல விடயங்கள் இன்றளவும் இடம்பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. இந்த வகையில் ஆய்வுப்பிரதேசத்தில் திருமணம் தொடர்பான ஆய்வுகள் இடம் பெற்ற போதும் கல்முனைக் குடி 1 தொடக்கம் 14 வரையிலான கிராம சேவகர் பிரிவை மையமாக வைத்து தற்கால திருமணம் பற்றி தனியாக ஆய்வுகள் இதுவரை இடம் பெறவில்லை என்பதுடன், ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள திருமணமுறைகள் பற்றிய இஸ்லாமிய கருத்து நிலையை முன்வைத்து இவ்விடயத்தில் இஸ்லாமிய விழுமியங்கள் பேணப்படுவதற்கான சில ஆலோசனைகளை முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்:**

- ✓ கல்முனை முஸ்லிம்களது நிகாஹ் நடைமுறைகளை விளக்குதல்
- ✓ ஆய்வுப்பிரதேசத்தில் நிகாஹ் நடைமுறைகளை இஸ்லாமிய கணணோட்டத்தில் நோக்குதல்.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

கல்முனைக்குடி 1 தொடக்கம் 14 வரையான கிராம சேவகர் பிரிவில் வாழும் முஸ்லிம்களில் கடந்த 2 வருடத்துக்குள் திருமணம் செய்தவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாய்வுக்கு 2013, 2014 ஆம் ஆண்டுகளில் திருமணம் செய்த ஆண்களிலும் பெண்களிலும் சம விகிதத்தில் 94 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5 : 1 திருமணம் என்ற விகிதத்தில் வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் கணனி மென்பொருட்களான SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு MS Excel மூலம் வரைபுகள் காட்டப்பட்டுள்ளது.

இவற்றுடன் நேரடி அவதானம் ஆய்வுப் பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்கள், ஆய்வுப் பிரதேச மக்களுடனான நேர்காணல், போன்ற முதலாம் நிலைத்தரவுகள் மூலமும் நூல்கள், இணையத்தள ஆக்கங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன.

**முடிவுரைகளும் விதந்துரைகளும்**

மணமகன் முஸ்லிம் ஆணாகவும், திருமண ஒப்பந்தத்தில் சுய சிந்தனையுடையவராகவும், பருவ வயதை அடைந்தவராகவும், இருப்பதுடன் திருமணத்தில் விருப்பம் இருக்க வேண்டும். மணமகன் திருமணத்தில் சமூகமளித்திருக்க வேண்டும், மணமக்களுக்கிடையில் தடுக்கப்பட்ட உறவுகள் எதுவும் இருக்கக் கூடாது. அத்துடன் மார்க்கப்பற்றுள்ளவராகவும், ஒழுக்கம் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

மணமகள் சுய சிந்தனையுள்ளவளாகவும், கற்புள்ளவளாகவும், ஒழுக்கமுள்ளவளாகவும் இருக்க வேண்டும். வேறு ஒருவரின் மனைவியாகவும் இத்தா அனுஷ்டித்துக் கொண்டிருப்பவளாகவும் இருக்க கூடாது. உடனடியாக அடையக் கூடிய இடத்தில் மணமகள் இருப்பதோடு மணப் பெண்ணுக்கும் அவளை விவாகம் செய்யப் போகும் ஆணுக்குமிடையில் மஹ்ரமான உறவு முறைகள் இருக்கக் கூடாது. மணப்பெண் *'முஸ்லிமத்'* ஆக (இஸ்லாம் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவளாக) இருக்க வேண்டும். கிறிஸ்தவ, யூதப் பெண்களும் வேதக்காரர்கள் என்ற அடிப்படையில் நபி (ஸல்) அவர்களது கலத்தில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அந்த அனுமதி உமர் (ரழி) காலத்தில் தடுக்கப்பட்டிருந்தது.

இவற்றுள் ஆய்வுப்பிரதேசத்தை பொருத்தவரை குறை காண்பதற்கில்லை.

முஸ்லிம்களது திருமணத்தில் நிகாஹ் இன்றியமையாத அம்சம் என்ற வகையில் கல்முனை முஸ்லிம்களது திருமணத்திலும் நிகாஹ் இடம்பெறுகின்றது. இது 'காவின்' எழுதுதல் என்று சொல்லப்படுகின்றது. அதாவது திருமண ஒப்பந்தத்தை பதிவு செய்யும் நிகழ்வு ஆகும். 61.70% மான காவின் நிகழ்வு மஸ்ஜிதிலேயே இடம் பெறுகின்றது. முன்னொரு காலத்தில் மஸ்ஜிதிற்கு திருமணத்தை கொண்டு செல்வது கௌரவ குறைச்சலாக கருதப்பட்டு மணமகன் வீட்டிலேயே காவின் இடம் பெற்றது. தற்போது இந்நிலை மாற்றமடைந்து அதிகளவான காவின் ஒப்பந்தம் மஸ்ஜிதில் இடம் பெறுகின்றது. மண்டபத்தில் இடம் பெறும் 21% நிகாஹில் 12.77% மானவை மண்டபத்தல் வைத்தே இடம் பெற்றதுடன் 25.53% மான நிகாஹ் மணமகன் வீட்டில் இடம் பெற்றுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

கல்முனை முஸ்லிம்களது நிகாஹ் நிகழ்வு பெரும்பாலும் (58.51%) மாலை நேரம் அஸருக்குப் பின்னர் இடம் பெறுகின்றது. எனினும் அதற்கு ஈடான வகையில் காலையில் சுபஹ் தொழுகைக்குப் பின்னர் (36.17%) காவின் ஒப்பந்தம் எழுதப்படுகின்றது. இரவு வேளையில் இஷாவுக்குப் பின்னர் இடம்பெறும் காவின் (36.17%) மிக குறைவாகும். நிகாஹ் சில இடங்களில் வளர் பிறை, தேய் பிறை பார்த்தும் இடம் பெறுகிறது. வளர் பிறையில் இடம் பெறும் திருமணங்கள் நீண்ட ஆயுளுடனும் தேய் பிறையில் இடம் பெறும் திருமணங்கள் விரைவில் முறிவடைந்துவிடும் என்றும் ஒரு சில மக்களிடம் நம்பிக்கை காணப்படுகின்றது.

நிகாஹ் வைபவங்கள் மணமகள் வீட்டிலும் மண்டபங்களிலும் இடம் பெறுகின்றது எனினும் எளிமையாக மஸ்ஜிதில் நடத்துவது சுன்னத்தாகும். நிகாஹானது தொழுகைக்குப்பின் மஸ்ஜிதில் இடம் பெறுகின்ற போது றஹ்மத்துடைய மலக்குகள் வருகின்றனர். அதை விட பாக்கியம் மனிதனுக்கு எங்குமே கிடைக்கப்போவதில்லை. இதில் ஆய்வுப்பிரதேச கொள்கை வாதிகள் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளனர். இதனை பின்வரும் ஹதீஸூம் நிறுவுவதாக அமைகின்றது.

‘‘நிகாஹ்வை பகிரங்கமாகவும் மஸ்ஜிதுகளிலும் நடாத்துவீராக’’ **(நூல்: அத்தபரானீ)**

திருமண ஒப்பந்தம் முஸ்லிம்களிடையே பதிவு செய்யப்பட்டு வருகின்றது. எனினும் திருமணம் செல்லுபடியாக பதிவு ஒரு நிபந்தனையல்ல. திருமணத்தை பதிவு செய்தல் ஒரு நிபந்தனையாக இஸ்லாமிய கோட்பாட்டில் இடம் பெறவில்லை. இஸ்லாமிய கோட்பாட்டின் படி நிகாஹ் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் வலி, சாட்சிகள், ஒப்புதல் வார்த்தை என்பவற்றுடன் நிறைவேறுவதாகும். இது பற்றி அறிஞர்கள் குறிப்பிடுகின்ற போது ‘‘மோசடி மிகுந்த தற்கால சூழலில் எதிர்கால நலனுக்காகவும் கணவன் மனைவியின் உரிமையை பாதுகாக்கவும் அதை பதிவு செய்வது சிறந்ததாகும். ஆனால் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் அது செல்லுபடியற்றதல்ல. நிகாஹ் நடைபெற்றால் திருமணம் நிறைவேறிவிடும்’’ என்று கூறுகின்றனர்.

மேலும் திருமணங்கள் வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமைகளில் நடத்துவதையே இப்பகுதி மக்கள் சிறப்பாக கருதுகின்றனர். திங்கள், புதன் கிழமைகளிலும் நிகாஹ் இடம் பெறுகின்றது ஏனைய நாட்களில் நிகாஹ் செய்வதை பெரும்பாலானோர் விரும்புவதில்லை.

நிகாஹ்வானது தகைமை மணமகன், மணமகள், வலி, இரு சாட்சிகள், ஈஜாப் கபூல் என்பவற்றுடன் இடம் பெறும் ஒப்பந்தம் இவை சரியாக நிறைவேறுமிடத்து திருமணம் பூர்த்தியாகிவிடும். இதுவே இஸ்லாமிய திருமணச்சட்டம் ஆகும். இதில் அனைவரும் ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர். இருந்த போதிலும் அவற்றுடன் சில அம்சங்களை பின்பற்றுவதில் ஆய்வுப்பிரதேசத்தில் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

ஒரு சாராரரிடம் வளர்பிறையில் திருமணம் நடத்தினால் அது சிறப்பாக இடம் பெறும் என்றும் தேய் பிறையில் நடத்தினால் தேய்ந்து விடும் என்றும் சில நம்பிக்கை காணப்படுகின்றது. இத்தகைய நிலைப்பாடு இஸ்லாத்தில் இல்லை என்று பெரும்பாலான கொள்கை வாதிகள் கூறுகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் நியாயம் என்னவெனில், ''நல்ல நாள் பார்த்தல், நட்சத்திரம் பார்த்தல் என்பதெல்லாம் இஸ்லாத்தில் இல்லை அவரவரது விதிப்படி நடக்க வேண்டியவை யாவும் நடக்கும் என்ற நம்பிக்கையுடையோர் ஒரு நாளில் நல்லது ஏற்படும் என்றோ இன்னொரு நாளில் கெட்டது ஏற்படும் என்றோ நம்ப முடியாது ஏனெனில் நாட்கள் அனைத்துமே அல்லாஹவிடத்தில் சிறந்ததாக உள்ளது. ஒரு முஸ்லிமின் வாழ்வில் எல்லா நேரமுமே நல்ல நேரம்தான். இதற்கு இஸ்லாத்தில் எந்த ஆதாரமுமில்லை என்று கூறுகின்றனர். இதற்கு அவர்கள் நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களை திருமணம் செய்த நிகழ்வையும் ஆதாரமாகக் கொள்கின்றனர். நபி (ஸல்) அவர்களது காலத்தில் அரேபியர்கள் ஷவ்வால் மாதம் பீடை மாதம் எனக்கருதி அந்த மாதத்தில் நல்ல நிகழ்ச்சிகளை நடாத்துவதை தவிர்த்து வந்தார்கள்.

> ''நபி (ஸல்) அவர்கள் ஷவ்வால் மாதத்திலேயே ஆயிஷா (ரழி) யை திருமணம் செய்தார்கள். ஷவ்வால் மாதத்திலே உறவும் கொண்டார்கள் அவர்களின் மனைவியரில் அவரை விட அவர்களுக்கு விருப்பமானவர் எவரும் இருக்கவில்லை.''**(அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) நூல்: முஸ்லிம், நஸயி, அஹ்மத்)**


முஸ்லிம்களில் பெரும்பாலானோர் துல்கஹ்தா, ரஜப் மாதங்களில் தான் திருமணங்களை வைக்க பிரியப்படுகின்றார்கள். பெரும்பாலும் திங்கள், புதன், வெள்ளிக்ககிழமைகளை விரும்புகிறார்கள். காலை அல்லது மாலை நேரங்களில் திருமணம் செய்வதை விரும்புகின்றனர். இவை பற்றி சில அறிஞர்கள் கருத்துக் குறிப்பிடும் போது பின்வரும் ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டு வருகின்றனர்.

> ''என் இரட்சகனே! எனது உம்மத்தினருக்கு காலை வேளையை பறக்கத்துக்குறியதாக ஆக்கி வைப்பாயாக'' **(நூல்: திர்மதி)**

> ''உடமையாகுபவற்றை மாலையில் ஆக்கிக் கொள்ளுங்கள் அது பரக்கத் பொருந்தியது'' (**அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: புகாரி)**

இதன்படி காலை வேளையோ மாலை வேளையோ தான் திருமணம் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தப்படவில்லை என்பதில் ஆய்வுப்பிரதேச கொள்கை வாதிகள் ஒரே கருத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

**காவின் நிகழ்ந்த இடம்**




**மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு 2013**

இங்கு மஸ்ஜிதில் காவின் எழுதுவதற்காக மணமகனை மணமகள் வீட்டார் அழைத்துச் செல்லும் வழக்கம் காணப்படுகின்றது. திருமண ஒப்பந்தத்தை பதிவு செய்தலானது ஆய்வுப்பிரதேசத்தை பொருத்தவரை 100% நிகழ்ந்துள்ளது. திருமணத்துக்கென்று ஒரு ஆலிமை அல்லது மௌலவியை பொறுப்பாளராக நியமிக்கின்றனர். இவர் வக்கீல் எனப்படுகின்றார். இவரே திருமணத்தை நடத்தி வைக்கிறார். நிகாஹில் வகீலை நியமித்தலானது ஆய்வுப்பிரதேசத்தில் 94.68% மான திருமணங்களில் இடம் பெற்றுள்ளதிலிருந்து இதனை அறிய முடிகிறது.

நிகாஹ்வை நடத்தும் வக்கீலுடன் காவின் களரியில் வலிகாரர் (பெண்ணின் பொறுப்பாளர்), சில முக்கியஸ்தர்கள் உறவினர்கள் முதலியோர் பங்கு கொள்கின்றனர். சில பகுதிகளில் குடி மரைக்கார் ஒருவரை நியமிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. குடி மரைக்கார் மணப்பெண்ணின் வழியில் அந்தஸ்து பெற்ற ஒருவராக இருப்பார். ஆய்வுப்பிரதேசத்தில் குடி மரைக்கார் ஒருவரை நியமித்தல் 32.98% மான திருமணங்களில் இடம் பெற்றுள்ளது. முன்னைய காலங்களில் அதிகளவில் இடம் பெற்ற இவ்வழக்கம் தற்போது குறைந்துள்ளது என அறிய முடிகிறது.

இவற்றை தொடர்ந்து நிகாஹின் முக்கிய கட்டங்கள் இடம் பெறுகின்றன. மணமகளின் பொறுப்பாளருக்கும் மணமகனுக்கும் இடையில் 'ஈஜாப்-கபூல்' இடம் பெறும். மணமுடித்த விடயத்தை வலிகாரர் அல்லது வக்கீல் மணமகனிடம் கூறுவதை 'ஈஜாப்' என்றும் மணவாளன் அதை ஏற்றுக் கொள்வதை 'கபூல்' என்றும் சொல்லப்படும். இவற்றுடன் இரு சாட்சிகள் கையொப்பமிடுவர். கல்முனையில் இடம் பெற்ற நிகாஹில் ஈஜாப் கபூல், சாட்சிகள் என்பன

100% இடம் பெறுகின்றது. இந்நிகழ்வுகளுடன் காவின் முடிந்து விடுகின்றது. இது ‘காவின் முடித்தல்’ அல்லது ‘நிகாஹ் முடித்தல்’ எனப்படும். இதன் போது மணமகள் பிரசன்னமாவதில்லை. இதைத் தொடர்ந்து 20 நிமிடங்கள் குத்பா உரை இடம் பெறும். ஆய்வுப்பிரதேசத்தில் இடம் பெற்ற நிகாஹில் திருமண குத்பா 94.68% நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. குத்பாவுடன் அனைவரும் ஸலாம் கூறி விடைபெறுவர்.

நிகாஹின் போது சில இடங்களில் மணமகள் வீட்டு சிற்றுண்டி (24.52%) பரிமாறப்படுகிறது. நிகாஹ் சபையில் மணமகனுக்கு மணமகள் வீட்டார் ‘வட்டா’ கொண்டு செல்லல் இடம் பெறுகின்றது. இவ்வம்சம் ஆய்வுப்பிரதேசத் திருமணங்களில் 76.60% மான திருமணங்களில் இடம் பெற்றுள்ளது. 23.40% திருமணத்தில் இந்நடைமுறை இடம் பெறவில்லை. வட்டா கட்டுதல் அவரவர் வசதியை பொருத்து மணமகள் வீட்டினரால் செய்யப்படுகின்றது. இதில் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு, பழவகைகள், வாசனைத்திரவியங்கள், என்வற்றை உள்ளடக்கி 3 அடி உயரத்துக்கு வட்டாவுடன் சேர்த்து புடவையில் கட்டி கொண்டு செல்வர். இது நிகாஹ் சபையில் மணமகனுக்கு அளிக்கப்படுவதுடன் மணமகளது தந்தை மணமகனுக்கு ஒரு அன்பளிப்பை வழங்குவார். இவ்வன்பளிப்பு 14.89% மான திருமணங்களில் தங்க மோதிரம் அணிவித்தலாக அமைந்துள்ளதை ஆய்விலிருந்து அறிய முடிகிறது. சில இடங்களில் இது மணமகனின் கையில் வழங்கப்படுவதுடன் கடிகாரம் அல்லது வெள்ளி மோதிரம் என்பவையும் வழங்கப்படுகிறது.

**நிகாஹில் இடம் பெற்ற நிகழ்வுகள் பற்றிய விபரம்**


| காவின் நிகழ்வுகள் | சதவீதம் |
|---|---|
| பதிவு செய்தல் | 100% |
| வக்கீல் நியமிக்கப்படல் | 94.68% |
| குடி மரைக்கார் நியமித்தல் | 32.98% |
| குத்பா இடம் பெறல் | 94.68% |
| தங்க மோதிரம் அணிவித்தல் | 14.89% |
| வட்டா கட்டுதல் | 76.60% |
| மணமகள் வீட்டு சிற்றுண்டி பரிமாரப்படல் | 24.52% |
| சாட்சிகள் ஒப்பந்தமிடல் | 100% |
| ஈஜாப் கபூல் இடம்பெறல் | 100% |

**முலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு**

கல்முனை முஸ்லிம்களது நிகாஹில் பெருவாரியாக வலிகாரராக (76.60%) மணமகளின் தந்தையே இருந்திருக்கிறார். தாய் தந்தை வழி சகோதரர்கள் (உடன் பிறந்த சகோதரர்) 9.57% மான நிகாஹில் வலிகாரராக இருந்துள்ளனர். மணப்பெண்ணின் தந்தையின் சகோதரர் 4.26%

மான திருமணங்களிலும், காழி 7.45% மான நிகாஹிலும் பிற உறவினர்கள் 2.13% மான நிகாஹிலும் வலிகாரராக இருந்துள்ளார்.

**நிகாஹில் வலியாக இருந்தோர் விபரம்**





**மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு**

ஆய்வுப்பிரதேசத்தில் வலியாக இருந்தவர்களது விபரத்தை நோக்கும் போது 77.6% மான திருமணங்களில் மணப்பெண்ணின் தந்தை பொறுப்புதாரராக இருந்திருக்கிறார். 9.57% திருமணங்களில் மணப்பெண்ணின் சகோதரர் வலிகாரராகவும் 7.45% மான திருமணத்தில் பெண்ணின் தந்தையின் சகோதரரும் 4.26மூ மான திருமணத்தில் காழியும் 2.13% மான திருமணத்தில் பெண்ணின் பிற உறவினர்களும் இருந்துள்ளனர்.

சில திருமணங்களில் தந்தை உயிருடன் இல்லாத போது அல்லது அவர் வெளிநாட்டில் இருக்கம் போது அவர் தவிர மற்றவர் வலியாக பொறுப்பேற்கிறார். வேறு சில திருமணங்களில் தந்தை மணமகளின் தாயை விட்டு வேறு திருமணம் முடித்துக் கொண்ட போது அவரை அழைக்காமல் விடுதல், பெற்றோருக்கு திருமணத்தில் விருப்பமின்மையால் தாங்களே திருமணம் செய்து கொள்ளல் போன்ற காரணிகளால் தந்தை தவிர மற்றுமொருவர் வலியாக நியமிக்கப்படுகிறார். காழி மற்றும் வேறு சில உறவினர்கள் வலியாக இருந்து நடத்தி வைத்த திருமணங்கள் காதல் திருமணங்களாக உள்ளது. சிலர் பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வந்து திருமணம் செய்து கொள்கின்றனர். இத்தகையவர்களுக்கு வலி எவரும் இல்லாத பட்சத்தில் காழி வலியாக செயற்படுகின்றார். கீழ்வரும் வரைபடம் இதனை நிறுவிக்காட்டுகின்றது.

**காதல் திருமணத்தில் வலியாக இருந்தோர் விபரம்**




**மூலம்: வினாக்கொத்து அளவை ஆய்வு**

மேலுள்ள வரைபடத்தின் படி காழியால் வலியாக இருந்து நடத்தி வைக்கப்பட்ட 7.45% மான திருமணங்களும் பிற உறவினர்கள் வலியாக இருந்து நடத்தி வைத்த 2.13% மான திருமணங்களும் காதல் திருமணங்களாக அமைந்துள்ளமையைக் காணலாம். இதிலிருந்து பெற்றோரது அனுமதியின்றிய திருமணங்களுக்கே காழி அல்லது பிற உறவினர் வலிகாரராகின்றனர் என அறியலாம்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தொடர்ந்தும் ஒரு ஆலிம் வகீலாக இருந்து நிகாஹ் நடத்தி வைக்கும் முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. இது பற்றி ஒரு சாரார் கருத்துக் குறிப்பிடும் போது இவர்களின்றி திருமணம் நடைபெற்றாலும் அது செல்லுபடியானதாகும். மேலும் காலம் காலமாக ஒரு ஆலிமிடம் வகீலாக நிகாஹ் நடத்தி வைக்கும் பொறுப்பை ஒப்படைப்பதனை விட்டு ஏனைய குடி மகனுக்கும் இப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். வேறு சிலர் அது பற்றிய மார்க்க அறிவை திருமணம் நடத்துபவர் பெற்றிருப்பதும் அவசியமாகும். ஆலிம் தான் வகீலாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை எனினும் திருமண முடிப்போருக்கு அது பற்றிய விளக்கங்கள் தெரியாதபோது தெரிந்தவர்கள் நடாத்திவைப்பது பொருத்தமாகும். நிகாஹை உறுதிப்படுத்துவதற்கும் பின்னைய பிரச்சினைகளுக்கும் உதவியாக அமையும் என்றும் கூறுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை நிகாஹில் வலி பற்றிய இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதில் சில சிக்கலான நடைமுறைகள் காணப்படுகின்றது. முஸ்லிமான ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து தமது சொந்த ஊரைவிட்டு மற்றொரு ஊருக்கு சென்று விவாகம்

செய்து வைக்க வேண்டும் போது அதில் விவாகப்பதிவாளர்கள், ஆலிம்கள், காழி ஆகியோர் நிகாஹ் செய்து வைக்கின்றனர். இத்தகைய நிகாஹைப் பற்றி கொள்கை வாதிகளுல் ஒரு சாரார் குறிப்பிடும் போது பெற்றோர் அழைக்கப்படாது வலிகாரர் முறையாக இடம் பெறாத இவ்வொப்பந்தங்கள் இடம் பெறும் போது திருமணமே செல்லுபடியற்றதாகி விபச்சாரம் செய்த பாவம் கிடைத்துவிடும் என்று கருத்துக் குறிப்பிடுகின்றனர். மற்று மொரு சாரார் இதனை விமர்சிக்கும் போது இத்தகைய திருமணங்கள் மணமகனை முன்னுரித்தான வலிகாரரகள் மறுக்கும் பட்சத்தில் இத்தகையோர் மணம் செய்து வைக்கலாம் என்கின்றனர். இதனை முன்னைய பிரிவினர் மறுத்து நல்லொழுக்கமுள்ள மணமகனுக்கு மட்டுமே இவ்விதி பொருந்தும் என்றும் மணமகனது நல்லொழுக்கம் பற்றி அறிவது சிரமம் என்றும் கூறுகின்றனர்.

இக்கருத்துக்களை இஸ்லாமிய வழியில் அணுகுவது அவசியமாகும். வலி இல்லாது திருமணம் நிகழாது என்பது இஸ்லாமிய விதியாகும். சில இடங்களில் இந்நடைமுறையில் தவறு ஏற்படுகின்றது. தாய்வழியில் வலி நியமிக்க முடியாது என்பது இஸ்லாமிய நியதி ஆகும். பெண்ணுக்கு தந்தை இருக்கும் போது வலி பற்றிய பிரச்சினை எழுவதில்லை. தந்தை இல்லாத போது அல்லது அவர் பிரிந்து வாழும் சந்தர்ப்பங்களிலும் இவ்விடயத்தில் தவறு எற்படுகின்றது. வலியாக இருக்க முதல் தகுதி தந்தைக்கு உரியதாகும் அடுத்து தந்தையின் தந்தை உடன் பிறந்த சகோதரன் தந்தைவழி சகோதரன் சகோதரனின் சகோதரன் என்பவர்கள் நியமிக்கப்படுவதே வலி நியமனத்தின் ஒழுங்கு விதியாகும். இதில் முரண்பாட்டுக்கு இடமில்லை. இவர்கள் எவரும் இல்லாத பட்சத்திலேயே இஸ்லாத்தைப் பொருத்தவரை சுல்தான் வலியாக நியமிக்கப்படலாம் என்கிறது.

> எப்பெண்ணுக்கு வலி இல்லையோ அப்பெண்ணுக்குரிய வலி சுல்தான் ஆவார் **(நூல் அபூதாவுத், தீர்மிதி, இப்னுமாஜா நஸஈ அஹ்மத்)**

ஷரிஅத் வழக்கில் சுல்தான் என்பவர் பரந்துபட்ட அதிகாரப் பெறுப்பை நிர்வாகம் செய்யும் உயர் அதிகாரி. இலங்கை நடைமுறையில் விவாக விடயங்களுக்கு பொறுப்பு காழிக்கு வழங்கப்படுகின்றது காழி என்பவர் குறுகிய எல்லைக்குள் நீதி, நிர்வாக எல்லைகளைக் கையாள்பவராக இருப்பார். மேற்கொண்ட நபி மொழியின்படி இவரையும் வலியாக நியமிக்க முடியும் என்கிறது. ஒரு பெண்ணுக்கு மிக நெருக்கமான வலிகாரர் இல்லாத போது அவருக்கு அடுத்தபடியாக செயற்படும் அதிகாரம் ஷரிஅத்தில் காழிக்கு வழங்கப்படுகின்றது. இவரால் விவாகம் செய்து வைக்கப்படுகின்ற பெண் இவரது எல்லைக்குட்பட்டிருப்பது அவசியமாகும்.

காழி வலியாக வர சில சந்தர்ப்பங்கள் உண்டு. உரித்தான வலிகாரர் இல்லாது இருத்தல், வலி தூர இடங்களில் வசித்து வருதல் (தூர இடம் என்பது ஷரிஅத்தில் அனுமதிக்கப்பட்ட பிரயாணத்தின் போது ஐவேளை தொழுகைகளை சேர்த்தும் சுருக்கியும் தொழ வரையறுக்கப்பட்ட தூரமாகும். இதனை 89.04 கிலோ மீற்றர்கள் என வரையறுக்கலாம். எனினும் போக்குவரத்து சாதனம் விரிவடைந்துள்ள இந்த நவீன யுகததில் வலி ஒருவர் உரிய இடத்துக்கு சமூகமளிப்பது சிரமமல்ல.) வலி இஹ்ராம் தரித்திருத்தல், வலி திருமணம் செய்து

வைக்க மறுத்தல், வலி மயக்கம் போன்ற நிலையில் இருத்தல், வலி திருமணம் செய்து வைக்க மறுத்தல் இத்தகைய நிலையிலேயே காழி வலியாக நியமிக்கப்பட முடியும். மேலும் காழியை வலியாக நியமனம் செய்தால் பணம் கொடுத்து நியமிக்க முடியாது ஏனெனில் நிகாஹ் கணவன் மனைவியை இணைக்கும் புனிதமான ஒப்பந்தம் ஆகும்.

முதன்மை உரித்தானவர் இருக்க வேறு எவரும் அவருக்குரிய அனுமதியின்றி திருமணம் செய்து வைக்க முடியாது உரித்தான வலி திருமணம் செய்து வைக்க மறுக்கும் போது இரண்டு நிபந்தனைகளுடன் மற்றையவர் வலியாகின்றார் முதலாம் நிபந்தனை உரித்தான வலி பல தடவை அழைக்கப்பட்டும் அவர் மறுத்தல், அவருடைய தவறுகள் வழிபாடுகளை விட அதிகமாக காணப்படல் வேண்டும். இந் நிபந்தனைகளுக்கு மாறாக செய்யப்படும் திருமண ஒப்பந்தங்கள் செல்லுபடியற்றது ஆகும்.

> ஏனெனில் வலி இன்றி திருமணமில்லை. நீதமான ஒரு வலியை கொண்டே நிகாஹ் செய்து வைக்கப்படும் **(அல் ஹதீஸ்)**

இஸ்லாத்தில் பிள்ளைகள் மீது தகப்பனது பொறுப்பு உணர்த்தப் படுகின்றது. பிள்ளைகள் வாலிபப்பருவம் அடைந்தாலும் அவர்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து அவர்களது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொண்டு மண வாழ்வில் நுழைவதே பொருத்தமாகும். இவை இஸ்லாம் தெளிவாக வரையறுத்த கோட்பாடுகளாக உள்ளன. நபி (ஸல்) அவர்களது ஹதீஸ் ஒன்று இங்கு நோக்கத்தக்கதாகும்.

> ‘‘யாருக்காவது ஒரு குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் பெயரையும் ஒழுக்கத்தையும் அவர் அழகு படுத்திக் கொள்ளட்டும் அக்குழந்தை விவாகம் செய்யும் வயதை அடைந்தால் விவாகம் செய்து வைக்கட்டும் அவன் விவாகம் செய்யும் வயதை அடைந்து அவனுக்கு விவாகம் செய்து வைக்காத போது அவன் ஒரு பாவத்தை செய்தால் அது தகப்பன் மீதுள்ள குற்றமாகும்’’ **(நூல் - பைஹகி)**

எனவே வலிகாரரை நியமிப்பதில் காழி, இமாம்கள், விவாகப் பதிவாளர்கள் கவனமாக இருப்பது அவசியமாகும். ஏனெனில் அவர்களது பொறுப்பு சமுதாயத்தில் மிக உயர்ந்ததாகும். எனினும் சில விவாகங்களில் மணமக்கள் காழி போன்றோரிடம் வலிகாரர் சமூகளிக்க முடியாதுள்ளார் என அல்லது வலிகாரர் எவரும் உயிருடன் இல்லை என்றும் பொய் சொல்லி திருமணம் இடம் பெறும் போது காழியோ வலிகாரரோ பொறுப்பாக முடியாது. மேலும் சில திருமணங்களில் முதன்மை உரித்தாளர்கள் அழைக்கப்படாமலே பெண்ணை பராமரித்தவர், பிற உறவினர்கள் போன்றோரை நியமிக்கின்றனர். முதலுரித்துடையவரை நியமிக்க முடியுமாக இருக்க அடுத்தவர் நியமிக்கப்படுவது முற்றிலும் அநீதியானதும், பாவமானதுமான திருமணமாகும். **(நேர்காணல்:02)**

நிகாஹில் நியமிக்கப்படும் சாட்சிகள் பாவம் செய்யாது இருப்பது அவசியமாகும் வலி பாவம் செய்தால் தௌபா செய்ய அனுமதிப்பதன் காரணம் அவரது கடமை அப்படிப்பட்டது. மேலும் அவரை தட்டிக்கழிக்காது அவர் விடயத்தில் சற்று நெகிழ்வுப் போக்கு ஷரிஅத்தில் காணப்படுகின்றது. சாட்சிகளைப் பொறுத்த மட்டில் அவர்களது கடமை மகத்தானது பொறுப்பு வாய்ந்தது ஆதலால் அதற்கு தகுதி வாய்ந்தவரையே முன்னிலைப்படுத்த வேண்டும். அவர் மார்க்கம் பேணுதல் உள்ளவராக இருப்பது அவசியமாகும். எனவே விவாக ஒப்பந்தத்தில் கையெழுததிடப்படும் சாட்சி கவனமாக நியமிக்கப்பட வேண்டும். என்பது இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

> இன்னும் உங்களில் இருந்து நீதமுள்ள இருவரை சாட்சியாக ஆக்கி கொள்ளுங்கள் **(அல்குர்ஆன் 65: 2)**

சாட்சியானவர் புத்தி சுவாதினமுள்ளவராகவும் புத்தி சுவாதீனமுள்ளவர் பருவ வயதை அடைந்தவராகவும், ஒப்பந்தத்தில் இரு தரப்பினரின் பேச்சைக் கேட்டு விளங்கக் கூடியவராகவும், நன்நடத்தையுடையவராகவும் (மார்க்கப் பேணுதல்) , ஆணாகவும் ,முஸ்லிமாகவும் இருக்க வேண்டும் என்பது இஸ்லாமிய விதி முறையாகும்.

ஆய்வுப்பிரதேசத்தை பொருத்தவரை மார்க்கப் பேணுதல் கொண்ட சாட்சியாளரை நியமித்தல் எனும் நிபந்தனையில் தான் சில தவறுகள் இடம் பெறுவதாக கூறி கொள்கைவாதிகள் வேறுபட்ட கருத்துக்களைப் கொண்டுள்ளனர். சாட்சியின் நேர்மையைப் பற்றி அறியாத நிலையில் அவர் சாட்சியாக வரமுடியுமா என்ற விடயத்தில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். நேர்மை பற்றி ஆராய்ந்தே சாட்சிகள் பெறப்பட வேண்டும் என்ற நிலை காணப்படின் அது கஷ்டமாகும். எனவே ஒருவரது வெளிப்படையான நன்நடத்தையே போதுமானது என்பதே அவர்கள் இதற்குக் கூறும் நியாயமாகும். ஒப்பந்தம் நடந்து முடிந்த பின்னர், குறிப்பிட்ட நபர் பெரும்பாவி, நேர்மையற்றவர் என்பது தெரிய வரினும் அது ஒப்பந்தத்தில் எத்தகைய தாக்கத்தையும் விளைவிக்காது. ஷாபிஈ (றஹ்) வின் வழிமுறையும் இதுவாகும் இன்னும் சிலர் சாட்சியின் மார்க்கப்பேணுதல் விடயத்தில் கடும்போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

மணமக்கள் ஒன்றிணைவதற்கான இறுதி ஒப்பந்தம் ஈஜாப் கபூல் ஆகும் இவ்வார்த்தைகளின் பொருளை நோக்கும் போது வலி சார்பில் மணமகளை இன்ன மஹருக்கு தந்தேன் என்றும் மணமகன் இன்ன மஹருக்கு ஏற்றுக் கொண்டேன் என்றும் ஒப்புவிப்பது. இவ்வார்த்தைகளுக்கடையில் வேறு எந்தப் பேச்சும் நிகழக் கூடாது. இவை காட்சிகள் செவியோற்குமளவுக்கு அமைய வேண்டும் இது இஸ்லாமிய திருமணம் வெறும் சடங்கல்ல. புனித ஒப்பந்தம் என்பதை நிறுவுகின்றது.

> ‘‘அப்பெண்கள் உங்களுடன் கடுமையான உடன்படிக்கை செய்துள்ளனர்’’ **(அல்குர்ஆன் 4:21)**

இவை புரியும் மொழியில் அமையலாம். அரபியில் தான் அமைய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. திருமணம் செய்த ஒரு தரப்பினர் பிறகு மறுத்து விடக் கூடும் என்பதாலும், விபசாரத்தில் ஈடுபடுவோரும் கணவன் மனைவி என்ற பெயரில் தப்பித்துக் கொள்ள முடியும் என்பதற்காகவும் ஏனைய கொடுக்கல் வாங்கல் போல் திருமணத்தல் இரு சாட்சி தேவையாகும். இவை சடங்குகளுக்காக அமைக்கப்பட்டவையல்ல. இவை உரிய முறையில் நிறைவேற்றப்படும் போதே திருமணம் செல்லுபடியாகும். இவை சீராக நிறைவு பெற்றால் திருமணம் முடிந்துவிடும், திருமணத்தால் இணைந்தவராகிவிடுவர்.

இவற்றுடன் ஆய்வுப் பிரதேசத்தில் இந்த 5 விடயங்களைத் தவிர ஏனைய சடங்கு முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இவை பற்றிய இஸ்லாமிய கருத்துக்களில் கொள்கை வாதிகளிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

திருமண நிறைவில் காவின் எழுதுதலின் போது ‘வட்டா’ கொண்டு செல்லும் அமைப்பு சில இடங்களில் காணப்படுகின்றது. இது அந்நியர் (தமிழர்) டமிருந்து நுழைந்த ஒரு சடங்கு என சிலர் கூறி ,இது கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டியது என்கின்றனர். மற்றும் சிலர் இவை மரபு ரீதியாக செய்யப்படும் சில கலாசார அம்சம் ஆகும். இது திருமணத்தை உறுதிப்படுத்தும் வழக்காறுகளாக உள்ளதுடன் இதனை செய்வதில் தவறில்லை என்கின்றனர். காவின் - திருமண ஒப்பந்தம் நிறைவு பெற்றதும் மணமகனுக்கு மணமகளின் தந்தையால் அன்பளிப்பு வழங்கப்படுகின்றது. இதன்போது சில வேளை தங்க மோதிரத்தை மணமகளுக்கு அணிவிக்கும் வழக்குகள் காணப்படுகின்றது. ஆனால் தங்கம் அணிதல் ஆண்களுக்கு தடைவிதிக்கப்பட்டது ஆகும்.

‘‘தங்கமும் பட்டாடையும் ஆண்களுக்கு தடுக்கப்பட்டுள்ளது’’ **(அல்-ஹதிஸ்)**

இதுவும் இஸ்லாத்தில் இல்லாத ஒரு நடைமுறையாகும் சடங்குகளாக மேற்கொள்ளப்படுகின்றதே தவிர இஸ்லாமிய திருமணத்துக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இக்கருத்தில் கொள்கைவாதிகள் அனைவரும் ஒரே கருத்தை கொண்டுள்ளனர். திருமண முடிவில் திருமண குத்பா சுமார் 20 நிமிடம் இடம் பெறுகின்றது இது சிறந்ததொரு நடைமுறையாகும் முன்னைய காலங்களில் இந்நடைமுறை குறைவாகவே இடம் பெற்றது. தற்போது இது அதிகம் இடம் பெறுவது வரவேற்கத்தக்கதாகும். என கொள்கை வாதிகள் கூறுகின்றனர். இதில் கருத்து வேறுபடவில்லை. திருமணம் மட்டுமன்றி பொது நிகழ்சிசியிலும் இது இடம்பெறலாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

குத்பா இல்லாமலும் திருமணம் செல்லுபடியாகும். திருமணத்துக்கு என்று இதை நபி (ஸல்) கற்றுத்தராது விட்டாலும் எல்லா நிகழ்ச்சிகளும் ஓதுவதற்கு கற்றுத் தந்துள்ளதால் திருமணத்திலும் இதை ஓதிக் கொள்ளலாம். திருமணம் நிறைவேற இது அவசியமான நிபந்தனை இல்லை.

நான் நபி (ஸல்) அவர்களிடம் அப்துல் முத்தலிபுடைய மகள் உமாமாவை மண முடித்துக் கேட்டேன் அவர்கள் குத்பா ஓதாமல் எனக்கு அவர் மணமுடித்து தந்தார் என்று பனூ சுலைம் கூட்டத்தை சேர்ந்த நபித்தோழர் அறிவிக்கிறார் **(அபூதாவூத்)**

திருமணத்தில் சில இடங்களில் சூறதுல் பாதிஹாவுடன் ஆரம்பித்தல் இடம் பெறுகின்றது. இதுவும் மார்க்கத்தில் இல்லாத ஒன்றாகும். மேலும் தாய் வழியில் ஒரு குடி மரைக்கார் நியமிக்கப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. இவர் சமூகத்தில் அந்தஸ்து பெற்ற ஒருவராக இருப்பார். இதுவும் இஸ்லாமிய நடைமுறையல்ல. ஏனெனில் இஸ்லாத்தில் குல, கோத்திர வேறுபாடுகள் காட்டுவது பாவமாகும். அல்லாஹ்வின் படைப்புக்களில் நல்ல காரியங்கள் செய்ய உயர் குடி ஒருவர் பங்குபற்றுவது என்ற சட்டங்கள் இஸ்லாத்தில் இல்லை. என்பதில் அறிஞர்கள் ஒன்றித்த கருத்தை கொண்டுள்ளனர்.

## ஆய்வின் பிரதான கண்டுபிடிப்புகள்

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத்திட்டம் என்றவகையில் அதன் போதனைகள் மனித வாழ்வின் அனைத்து கட்டங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். இதற்கு திருமணமும் விதி விலக்கல்ல. கல்முனை முஸ்லிம் மக்களிடையே திருமணம் ஒரு விழாவாக இடம் பெற்று வருகின்றது. இதனுடைய அம்சங்கள் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது ஒன்றாகவும் அதே நேரம் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டும் காணப்படுகின்றது. கல்முனை முஸ்லிம்களது திருமணத்தில் முன்னைய காலங்களில் கடைப்பிடித்து வந்த பல சடங்குகள் அருகி வருகின்றமையை இவ்வாய்வு மூலம் அறியலாம்.

அதாவது மக்கள் மத்தியில் நிலவும் திருமண நாள் வைபவமானது பொதுவாக இஸ்லாமிய முறைப்படி சாட்சிகள், வலி, ஈஜாப் கபூல், மணமகன் - மணமகள் என்பவற்றுடன் இடம்பெறுவதை அறியக்கூடியதாக இருந்தது. அந்த அடிப்படையில் திருமணம் செல்லுபடியற்றது என்றளவுக்கு இப்பிரதேச முஸ்லிம்களது திருமண அடிப்படை அம்சங்கள் அமையவில்லை என முடிவு செய்யலாம். மேலும் இஸ்லாமியத் திருமணத்துடன் பல கலாசார கலப்புக்களையும் நவீன விடயங்களையும் மக்கள் உள்வாங்கிக் கொண்டுள்ளனர் என்பதும் இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

## ஆலோசனைகள்

- ★ ஒவ்வொரு முஸ்லிம் பெற்றோரும் இளமையில் தமது பிள்ளைகளுக்கு இஸ்லாமிய வழிகாட்டல்களை ஊட்டுவதல்
- ★ ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் திருமணத்தின் போது இஸ்லாத்துக்கு புறம்பாக செயற்படுவதை தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.
- ★ திருமணக்களியாட்டம் என்ற பெயரில் ஆண்களும் பெண்களும் ஒழுக்க வீழ்ச்சியை நோக்கி பயணிப்பதை தவிர்த்தல்.
- ★ முஸ்லிம்கள் மத்தியில் திருமணத்தின் முக்கியத்துவம், திருமணத்துக்கான இஸ்லாமிய ஒழுங்குவிதிகள், அவற்றை பேணுவதன் அவசியம் தொடர்பான விழிப்புணர்வுகளை

மஸ்ஜிதுகள் மத்ரஸாக்கள், மார்க்க விளக்க வகுப்புக்கள், பாடசாலைகள் போன்றவற்றில் வழங்குவதன் மூலமாக ஆய்வுப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய திருமண நடைமுறையை ஏற்படுத்தலாம்.

- ★ ஊர் ஜமாஅத்தினர் இது தொடர்பாக கவனம் செலுத்தி, அத்தகைய எண்ணங்களை மக்களிடமிருந்து அகற்ற முயற்சிக்க வேண்டும்.
- ★ கற்ற பெரியவர்கள் இஸ்லாமிய திருமணம் பற்றிய அறிவூட்டல் வகுப்புகளை நடத்துதல் மூலம் மக்களை நல் வழிக்கு கொண்டு செல்லலாம்.
- ★ இஸ்லாத்துக்கு முரணாக ஈடுபடுவோரை ஜமாஅத்தின் கடுமையான தண்டனைக்குரிய குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்.

இது போன்ற ஆலோசனைகளை கல்முனை பிரதேச முஸ்லிம்கள் தமது வாழ்வில் நடைமுறைப் படுத்துவார்களேயானால் நபி வழிமுறையில் திருமணம் அமையவும், முறை கேடான திருமணங்கள் நடப்பதிலிருந்து சமூகத்தை பாதுகாக்கவும் முடியும்.

## உசாத்துணை நூல்கள்


Deacon Economos, T. S. (2004). **"Marriage"** [online]: available: http://www.deaconministry.com/marriage.htm [accessed] :[2013.02.08].

Hussain Ayoup. (1999). *Fiqh of Muslim Family*. Egypt: Islamic INC.

Jalaldeen, M. S. (2004). *The Muslim Law of Marriage Divorce & Maintains in Srilanka*. Colombo: Peace, Education, and Research Publishers.

Maxmuller. (2000). "***Regional weddings"*** [online] available: http://www.culturalindia.net/weddings/regional-weddings/.html [accessed]: [2013.02.08].

Mohamed Shakir Ali, in English Mohamed Salim. (2010). *Islamic Consept of Nikah* Mumbai: Maktabe Taiba. (Sunni Dawat e Islami).

Mohamed Yusuf Islahi. (1994). *Etiquettes of Life in Islam*. Delhi: Maktabia Islamic.

Moulana Maudoodi, in English Fazil Ahmed. (1983***).*** *The Laws of Marriage And Divorce in Islam*, Kuwait: Islamic Book Publishers.

Siddiqi, M. I. (1994). *Family Laws of Islam*. Delhi: Internatiol Islamic Publishers.

Shankar Rao. (1990). *Sociology - principles of Sociology with an introduction to Social thought*. New Delhi: s. Chand & Company LTD.

அப்துல் சமது, மு. (2004). *இஸ்லாமிய தமிழ் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்.* சென்னை: உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.

அப்துல் ரஸ்ஸாக், எம். ஏ. (1997). *இஸ்லாமிய வாழ்வியல் பிரச்சனைகளும் தீர்வுகளும்*, கொழும்பு: உலக இஸ்லாமிய அழைப்பு சமூகம்.

அப்துல் லதீப், எம். எம். ஏ. (2009), *விவாகம்*, அக்கரைப்பற்று: ஜின்னா பப்ளிகேஷன்.

அப்ஸரா. (2012.7.13). ***"திருமணத்தில் மட்டும் நபி வழியை மறந்தது ஏன்?"*** [online] available: http://www.islamiyapenmani.com/2012/07/blog-post_29.html [accessed] :[2013.02.07].

இமாம் கஸ்ஸாலி, (2004). தமிழில் அப்துல் வஹ்ஹாப், எஸ்., *இஹ்யாவு உலுமுதீன்-திருமணம்,* சென்னை: யுனிவர்ஷல் பப்ளிஷர்ஸ்.

சலீம், ஏ. ஆர். எம். (1992). *கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கலியாணச்சடங்குகள்.* அக்கரைப்பற்று: ஹிரா பப்ளிகேஷன்ஸ்.

சாஹுல் ஹமீத், எம். வை. (1994). *மறை கூறும் மணக்கோலம்.* திருச்சி: ஹமீதிய்யா பதிப்பகம்.

சமீலா யூசுப் அலி. (2012). திருமணத்தின் தீய பழக்கங்கள். ***எங்கள் தேசம்.*** கொழும்பு: ஜமஅதே இஸ்லாமி.

பைரூஸ் பரினா. (2006). திருமணமும் அந்நிய கலாசார தாக்கமும். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா.

பௌஸ். (2012.12.28). ***"இஸ்லாமியத்திருமணம் - நிகாஹ்"***. [online] available: http://www.dawahworld.com/?tag=marriage-in-islam [accessed] :[2013.02.03].

மன்சூர், எம். ஏ. எம்., (1993). *முஸ்லிம் தனியார் சட்டம் - 01 திருமணம்.* மல்வானை: தாருல் அர்கம் பப்ளிகேஷன்.

மீஆத். எம்.வை.எம். (1987). மகளிர் மனை. *இஸ்லாமிய சிந்தனை.* பேருவளை: ஜாமிஆ நளிமிய்யா.

முகவை கான். (2012.09.10). ***"இஸ்லாம் ஒரு எளிய மார்க்கம்"*** [online] available:http://mugavaikhan.blogspot.com/2012/09/blog-post_4810.html [accessed] : [2013.02.07].

முபாரக், எம். எஸ். எம். (2005). *கல்யானக்கடைத்தெரு.* மருதமுனை: மகாமின் அமீன் பப்ளிகேஷன்.

முஹம்மது அக்ரம், (2001). *நடைமுறைக்கேற்ற இஸ்லாம் பாகம் 2*, பஸ்யால: முஸல்மான் பப்ளிகேஷன்.

முஹம்மத் இப்னு முஸ்தபா, தமிழில் அப்துல் ஹாதி. (2010). *இஸ்லாமிய இல்லறம்.* சென்னை: சாஜிதா புக் சென்றர்.

முஹம்மது யூசுப். (1995). *பெண் ஸஹாபாக்கள் வரலாறு.* சென்னை: ஸலாமத் பதிப்பகம்.

முஹம்மது ஸலீம், அ., (1979). *இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்.* கொழும்பு: முஸ்லிம் கல்வி அமைச்சு.

நூறுல் அமீன், ஜே. (2009.07.18). ***"இஸ்லாமியத் திருமணம் என்ற அந்தஸ்தைப் பெறும் திருமணங்கள்"*** [online] available: http://opjameen.wordpress.com.2009/07/18.html [accessed] : [2013.02.07].

றிஸ்வான், எம். (2009). *சமூக நிறுவனங்கள் ஓர் அறிமுகம்.* ஒலுவில்: தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

றிஸ்வான். எம். ஜே. எம். (2006). இஸ்லாமியப் பெண்களுக்கான சட்டங்கள் - 04 ஆடையும் அதன் வரையரைகளும். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா.

றிஸ்வான். எம். ஜே. எம். (2007). இஸ்லாமியப் பெண்களுக்கான சட்டங்கள் - 08 மகளிர் மட்டும். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா.

ஸலீம், ஏ. ஆர். எம். (1997). *அக்கரைப்பற்று வரலாறு.* அக்கரைப்பற்று: பள்ளிவாசல் சம்மேளனம்.

ஸாதிகா. ***"திருமணம்"*** [online] available: http://allahuakbar.blogspot.com/search/label.html [accessed] : [2013.02.08].

ஜெமீல், எஸ். எச். எம். (1997). *அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்.* இலங்கை: முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம்.

ஜெயினுலாப்தீன், பீ. ஜே. (2000). *இஸ்லாமிய திருமணம்.* மதுரை: தாமிய்யா புக் சென்றர்.

ஹிமாயா யாசீன். (2007). இஸ்லாத்தின் பார்வையில் பெண்களின் அலங்காரம். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா.

ஹிஸாம். எம். ரீ. எம். (2002). அன்பளிப்புச் செய்வோமா?. *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமஅத் அன்ஸாரி சுன்னதுல் முஹம்மதிய்யா.